பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 29 (15—10—71) வெள்ளி   வெளியூர்: புரட்டாசி 30 (16—10—71) சனி [இதழ்: 102

யாகியாகானின் உட்கருத்து என்ன?

டெல்லி ஆராய்கிறது

புதுடில்லி, அக். 14—

பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் வானொலி மூலம் விடுத்த அறிவிப்பின் உட்கருத்துக் குறித்து, இந்திய அரசின் அதிகார வட்டாரங்கள் இன்னமும் ஆராய்ந்துவருகின்றன.

யாகியா கானின் அறிவிப்புப் பற்றி முழுவதுமாக மதிப்பீடு செய்யப்படும்வரையில் கருத்து எதுவும் தெரிவிக்க அந்த வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

நம் பொறுமையைச் சோதிக்கிறது

பாகிஸ்தான்

ஆத்திர மூட்டல்களால் போரைத்தூண்ட முயற்சி

எதிர்த்தரப்புத் தாக்குதல் ஏற்பட்டாலன்றி இந்தியா போரில் இறங்காது

நிலைமையைக் கூர்ந்து கவனித்து வருகிறார் இந்திரா காந்தி

புதுடில்லி, அக். 15—

வங்க தேசப் பிரச்சினை, இந்தியா – பாகிஸ்தான் நாடுகளிடையே ஒரு பெரும் போருக்கு வழிவகுக்குமா என்பது, இப்போது இந்தியாவிலுள்ள அனைவருக்கும் ஒரு கேள்விக் குறியாக ஆகியிருக்கிறது.

இந்தக் கேள்விக்கு டில்லியில், அரசாங்கத் தலைமையில் இருக்கும் யாராலும் ஒரே வரியில் பதில் சொல்ல முடியாத நிலை இருந்துவருகிறது; ஏனெனில், வங்க தேசப் பிரச்சினையில் பல சிக்கல்களும் பிணைந்து கிடக்கின்றன.

நிலைமையில் நாளுக்கு நாள் நெருக்கடி அதிகரித்து வருவதைக் கவனித்துவரும் பலரும், 'போர் தவிர்க்க முடியாததே' என்று கருத்தறிவித்திருக்கிறார்கள்.

பாகிஸ்தானே முன்வந்து ஒரு தாக்குதலை நடத்தினால் அன்றி– வேறு எந்த ஆத்திரமூட்டல்கள் ஏற்பட்டாலும் — இந்தியா போரில் இறங்காது என்பதை மட்டும் அனைவரும் உறுதியாகக் கூறுகிறார்கள்.

இந்தப் பிரச்சினையில் தலைமையமைச்சர் மிகவும் எச்சரிக்கையாக இருந்துவருகிறார் என்று குறைபட்டுக் கொள்கிறவர்கள் கூட, 'இந்திரா காந்தி மிகவும் பொறுமை காட்டுகிறார்' என்றே கூறுகின்றனர்.

தலைமையமைச்சரைப் பொறுத்த வரையில், பாகிஸ்தானை, கிழக்கு வங்கப் பிரதிநிதிகளுடன் ஓர் சமரசத்துக்கு இணங்கச் செய்ய உலக நாடுகளின் நிர்ப்பந்தம் தீவிரமாகும் — என்று கருதுகிறார்.

ஆயினும், 'எந்த நேரத்திலும் பாகிஸ்தான் திடீர்த் தாக்குதல் நடத்தக்கூடும்' என்று கருதி, கிழக்கு – மேற்கு எல்லைகளில் தகுந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை இந்தியா கடைப்பிடித்து வருகிறது.

எல்லையில் ஏராளமான படைகளைக் குவித்தும், போர் ஆயத்தம் செய்தும் பாகிஸ்தான் செயல்பட்டுவருவதை, நாட்டில் எந்தவிதப் பரபரப்பையும் உண்டாக்காமலேயே விரைந்து சமாளிக்கும் ஆற்றல் இந்தியப் பாதுகாப்புப் படையினர் பெற்றிருக்கின்றனர்.

சீனாவைப் பொறுத்தவரையில், அவர்களின் தாக்குதலைச் சமாளிக்கக்கூடிய அளவுக்கு இந்திய விமானப் படை வலிமையும் — ஆயுதப் பயிற்சியும் போதுமானதாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

திபெத்தில் சீனா 10 டிவிஷன் இராணுவத்தினரை வைத்துக் கொண்டிருக்கிறது; மற்றொரு எல்லையில் இரஷ்யப் படையினர் இருந்துவருவதால், அங்கிருந்து புதிய இராணுவப் படைகளை இந்திய எல்லைக்குக் கொண்டுவர சீனா துணியாது என்றும் கருதப்படுகிறது.

ஆகவே, கிழக்கு வங்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் பாகிஸ்தான் 5 டிவிஷன்களையும், மேற்குப் பாகிஸ்தானிலுள்ள 10 டிவிஷன்களையும சமாளிப்பதில் இந்திய இராணுவம், 1965-ம் ஆண்டுப் போரின்போது இருந்ததைவிட அதிகப் பலத்துடன் இருக்கிறது.

ஆகவே, அதிபர் யாகியா கானின் மிரட்டலையும் — புலம்பலையும் தலைமையமைச்சரோ — அவரது அமைச்சரவையினரோ — இந்திய இராணுவமோ ஒருபொருட்டாகவே மதிக்கவில்லை.

பாகிஸ்தானின் எந்த மிரட்டலையும் விரைந்து சமாளிக்க இந்தியாவால் முடியும்; தனது நாட்டு மக்களுக்கு போர் வெறியை ஊட்டிக் கொண்டுவரும் பாகிஸ்தான் இராணுவத் தலைமையும் இதனை உணராமல் இருக்கமுடியாது.

இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தானில் இயக்கம்

முன்னாள் இராணுவ அதிகாரி துவக்கியிருக்கிறாராம்

கராச்சி, அக். 15—

'இந்தியாவை ஒழிப்போம்'—'இந்தியாவை வெற்றி கொள்வோம்' என்று எழுதிய சுவரொட்டிகளைத் தாங்கிச் செல்வதும் — ஒட்டிக்கொள்வதும் ஒரு பிடித்தமான செயலாக இங்கு காணப்படுகிறது.

கார்கள் — டாக்சிகள் போன்றவற்றின் கதவுகளில் எல்லாம் இப்படிப்பட்ட காகிதங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன.

கடந்த 15 நாட்களாகவே ஆங்கிலத்திலும், உருதுவிலும் எழுதப்பட்ட சுவரொட்டிகள் பரலாக ஒட்டப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது.

இதுவன்றி இராவல்பிண்டியில் 'இந்திய அழிப்பு முன்னணி' என்ற ஓர் இயக்கத்தை, முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் துவக்கியிருக்கிறாராம்.

பெண்கள் குழு ஒன்றை அமைத்திருப்பதாகவும் இவர் அறிவித்திருக்கிறார்.

எந்த நிலைமையையும் சமாளிக்க ஆயத்தமாகுங்கள்

பாகிஸ்தானின் போர்வெறியிலிருந்து இந்தியச் சுதந்தரத்தைக் காப்போம்

நாட்டு மக்கட்கு இந்திரா காந்தி வேண்டுகோள்

பம்பாய், அக். 15—

"நாட்டைப் பாதுகாப்பதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும்.

"பிற நாடுகளை அச்சுறுத்துவதில் இந்தியாவுக்கு நம்பிக்கையில்லை; போரைத் தவிர்க்க நாம் முயற்சிக்கிறோம்; ஆனால், இந்தியா ஒரு சுதந்தர நாடு; நமது எல்லைகளைப் பாதுகாக்க நாம் உறுதிகொண்டிருக்கிறோம்; எத்தகைய நிலைமையையும் சமாளிக்க மக்கள் தயாராக இருக்க வேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, பம்பாயில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் எச்சரிக்கை செய்தார்; மேலும் அவர் வலியுறுத்தியதாவது :—

"வேளாண்மைத் துறையிலும் — தொழில் துறையிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன; ஆனால் உற்பத்திப் பெருக்கத்திற்கு அவை தடை போடுவதாக இருக்கக்கூடாது.

பாகிஸ்தானுடன் நட்பை வளர்த்துக்கொள்ள இந்தியா திரும்பத் திரும்ப முயன்றது; இந்தியா இந்த முயற்சியில் வெற்றி பெறுவதற்குப் பாகிஸ்தான் மக்கள் காரணம் அல்லர்; மக்களுடன் தொடர்பு இல்லாத ஒரு அரசாங்கம் பாகிஸ்தானில் இருப்பது தான் அதற்குக் காரணமாகும்.

வங்காள தேச அகதிகள் சிகிச்சை பெற்றுவரும் மருத்துவமனைகளுக்குச் சென்று பாருங்கள்; வங்காள தேச மக்களுக்குப் பாகிஸ்தான் இராணுவத்தினர் எத்தகைய கொடுமைகளை இழைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அங்கு நேரில் காணலாம்."

போர் மூளுவது எதிர்பார்க்கக்கூடியதே!

பெல்காம், அக். 15—

"இந்தியாவில் போர் ஏற்படக் கூடிய அபாயம் இருக்கிறது; மோதல் ஏற்படாமல் தடுப்பதற்கு நம்மால் இயன்றதையெல்லாம் செய்வோம்; ஆயினும், எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இங்கு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் சுட்டிக்காட்டினார்.

கேள்வி :—"எந்த நேரத்திலும் போர் வரக்கூடும் என்று நினைக்கிறீர்களா?"

பதில் :—"எப்போதும் நாம் தயாராக இருக்கவேண்டும்; சில நேரங்களில் நாம் முழு தயார் நிலையில் இருக்க வேண்டும்."

கேள்வி :—"போர் பயமுறுத்தல் எங்கிருந்து வருகிறதென்று குறிப்பாகச் சொல்லுவீர்களா?"

பதில் :—"நீங்கள் பத்திரிகைகளைப் படித்தால் இந்த பயமுறுத்தல் எங்கிருந்து வருகிறதென்பது தெரியும்."

கேள்வி :—"எல்லைப்புறங்களில் பாகிஸ்தான் துருப்புகள் பெரும் அளவில் குவிக்கப்படுகின்றன — என்ற பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தீர்களா?"

பதில் :—"நானும் அத்தகைய செய்திகளைப் படித்தேன்."

கேள்வி :—"அரசியல் தீர்வு என்பதன் சரியான விளக்கம் என்ன?"

பதில் :—"ஷேக் முஜிபுர் ரகிமானும் — தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும்தான் முடிவு செய்யவேண்டுமென்று எப்போதுமே நாம் சொல்லிவந்திருக்கிறோம்; எந்த மதத்தைச் சேர்ந்த அகதிகளாக இருந்தாலும், பாதுகாப்பாகவும் — கண்ணியத்துடனும் திரும்பிச் செல்லுவதற்கான நிலைமை இருக்கவேண்டுமென்பதே நம்முடைய கவலையாகும்; இதுதான் முக்கியமானதென்று நாம் கருதுகிறோம்."

கேள்வி :—"அத்தகைய நிலைமை தோற்றுவிக்கப்படும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?"

பதில் :—"ஏற்படுத்தான் ஆக வேண்டும்; வங்க தேசத் தலைவர்கள் என்ன செய்யவேண்டுமென்று இந்தியா கட்டளையிட முடியாது: ஏனென்றால், அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள்."

கேள்வி :—"ஷேக் முஜிபுர் ரகிமானை, தொடர்ந்து சிறையிலேயே வைத்துக்கொண்டிருக்கும் நிலைமையில், விரைவில் அரசியல் தீர்வு ஏற்படும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?"

பதில் :—"அவர் காவலில் இருந்தால் அவரையும் விடுதலை செய்யலாமே!"

பாகிஸ்தானின் போர் மிரட்டல்

கிருஷ்ணநகர், அக். 15—

வங்காள தேசத்தின் தென் மேற்கு எல்லைப் பகுதி நெடுகிலும், இந்தியாவின் எல்லையோரமாகப் பாகிஸ்தான் படைக் குவிப்பு துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடைசியாக வந்த தகவல்களிலிருந்து எல்லாக் கல்விச் சாலைக் கட்டடங்களையும் பாகிஸ்தான் இராணுவம் எடுத்துக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

இந்தியாவின் எல்லையிலிருந்து 20 மைலுக்குள் இருக்கும் நல்ல கட்டடங்களையெல்லாம் பாகிஸ்தான் இராணுவம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ராஜஷாகி, குஷ்டியா, ஜெஸ்ஸோர் போன்ற இடங்களில் இக்கட்டுக்கோப்புக் கட்டடங்கள் இருக்கின்றன.

நாடியா மாவட்டத்தில் கிருஷ்ணகுஞ்ச், அம்ஸ்காளி போலீசு வட்டாரங்களுக்கு நேர் எதிர்ப்புறமுள்ள ஈமான் நகரில், 3 காலாட் படை கம்பெனிகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

நம்நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2002 புரட்டாசி 29 (15—10—71) வெள்ளி

பாராட்டுக்குரிய சாதனை

தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை ஊழியர்கட்கு இவ்வாண்டு ஊக்கப் போனசாக ரூ. 85 இலட்சம் வரை வழங்க அரசினர் முடிவு செய்திருப்பதை, தொழிலாளர் நலனில் அக்கறையுள்ள எவரும் வரவேற்காமல் இருக்க முடியாது.

ஏறத்தாழ 16,500 தொழிலாளர்கள் இதனால் பயனடைவார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய ஒரு மாத அடிப்படை ஊதியத்தை போனசாகப் பெறுகிறார்கள்—குறைந்தபட்சம் ரூ. 140 ஆகவும், உயர்ந்தபட்சம் ரூ. 500 ஆகவும் இருக்கும்.

கடந்த ஆண்டு வழங்கப்பட்ட போனசுத் தொகையைவிட இந்த ஆண்டு 50 சதவிகிதம் அதிகமாகும்; சென்ற ஆண்டு மொத்தம் ரூ. 23 இலட்சம்தான் வழங்கப்பட்டது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

இத்துடன் வேலைக்கு ஒழுங்காக வந்ததற்கான வருகை (அட்டெண்டென்சு) போனசும் வழங்கப்படும்; மாதம் ரூ. 7.50 அல்லது பழைய அடிப்படை ஊதியத்தில் பாதி—இரண்டில் எது அதிகமோ அது கொடுக்கப்படும். இந்த வகையிலும் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ரூ. 90 வரை கூடுதலாகப் பெறுவார்கள்.

மேலும், அக்டோபர் முதல் இந்த வருகை போனசு ரூ. 7.50-லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இத்துடன், ஊழியர்கட்கு மற்றொரு சலுகையும் அளிக்கப்படுகிறது; அதாவது, ஊழியர் ஒருவர் தாம் சேமித்து வைத்திருக்கும் விடுமுறை நாட்களைப் பணமாக மாற்றிக்கொள்ளவும் அனுமதிக்கப்படுவார்; விடுமுறை எடுத்துக்கொள்ள விரும்பாத ஊழியருக்கு, உரிய சம்பளம் கொடுக்கப்படும்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பிறகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இம்முடிவுகளை அறிவித்துள்ளார்; அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர் அனைவருக்குமே இது மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகும்.

காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ள மாற்றுத் தொழிற்சங்கத் தலைவர்களைத் தவிர மற்ற தொழிலாளர் அனைவருக்குமே மனநிறைவூட்டக்கூடிய செய்தியாகும் இது.

மின்சார வாரிய ஊழியர்கட்குக்கூட சராசரி ஒருவருக்கு ரூ. 100 மட்டுமே (அதாவது 80,000 பேருக்கு ரூ 81 இலட்சம்) போனசாக வழங்கப்பட்டது. போக்குவரத்துத்துறை ஊழியர்கள், அவர்களைவிட அதிகத் தொகை போனசாகப் பெறுகிறார்கள்.

இந்த ஆண்டு ரூ. 1 50 கோடிவரை நட்டம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிற நிலையிலும், இவ்வளவு தாராளமாகத் தொழிலாளர்கட்குச் சலுகைகளை வழங்க அரசு முன்வந்திருப்பது ஒன்றே 'இந்த அரசு தொழிலாளர் நல அரசு' என்பதை எடுத்துக் காட்டுவதாகும்.

தொழிலாளர்கள் நலத்தில் எந்த அளவு அக்கறையுடன் இந்த அரசு நடந்து கொள்கிறதோ அந்த அளவுக்குப் பயணிகளின் வசதியைப் பெருக்குவதிலும் நாட்டம் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள தகவல்கள் மூலம் உணரலாம்.

"விரைவுப் பேருந்துகளை அதிகப்படுத்துவதன்மூலம் போக்குவரத்துத் துறையில் ஏற்படக்கூடிய நட்டத்தின் அளவு கணிசமாகக் குறையும்" என்று கூறிய அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் அரசுப் போக்குவரத்தில் மேலும் பல வசதிகளைப் பெருக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் விளக்கியுள்ளார்.

163 ஆக உள்ள விரைவுப் பேருந்துகள் 250 ஆக அதிகரிக்க இருப்பதுடன், விரைவுப் பேருந்துகளின் வேகமும் அதிகரிக்கப்படவிருக்கிறது. பேருந்துகள் பழுது ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளவும்—இடையிலே பயணம் தடைப்படாத வகையிலும் உரிய நடவடிக்கைகளெல்லாம் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

சென்னை நகர அரசுப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், "இன்னும் மூன்று திங்களில் நிலைமை முற்றிலும் சீர்பட்டுவிடும்" என்ற உறுதிமொழியையும் அமைச்சர் வழங்கியுள்ளார்.

"விரைவுப் பேருந்துகளில் பயணிகளின் வசதிகளைப் பெருக்கிப் பட்டணம் இனிமையாக இருக்கவும் வழி செய்யப்படும்" என்று அவர் அறிவித்துள்ளார்.

போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கட்கும்—பயணம் செய்யும் பொதுமக்களுக்கும் எந்தவிதக் குறையும் இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில்தான் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் அவ்வப்போது எடுத்துவருகிறது.

இப்பொழுதுள்ள நிலையில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இதைவிடக் கூடுதலான எதையும் சாதித்துவிட முடியாது.

தொழிலாளர்கள் இதனை உணர்ந்து, தங்கள் கடமையை ஆற்றவேண்டும்; பொதுமக்களும், அரசின் நடவடிக்கைகட்கு ஆதரவாகவும் உறுதுணையாகவும் இருந்து ஒத்துழைக்க வேண்டும்.

குறை சொல்லுவதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களின் கூற்றை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை. பொது நலனில் அக்கறை கொண்டுள்ள நல்லவர்கள் அனைவரும் இந்த அரசைப் பாராட்டவே செய்வார்கள்.

'ஏங்கிய உள்ளங்களின் ஏக்கம் நீங்கியது'

'அரசு அளித்த ஊக்கப் போனசு உவகை தரத்தக்கது'

தமிழக அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர் மகிழ்ச்சி

பரிசோதகர்—நேரக் காப்பாளர் சங்கத் தலைவர் அறிக்கை

சென்னை, அக். 15—

ஊக்கப் போனசு அளிக்கத் தமிழக அரசு முடிவு செய்திருப்பது பற்றித் தமிழக அரசுப் பஸ் போக்குவரத்துப் பரிசோதகர்—நேரக் காப்பாளர்கள் சங்கத் தலைவர் முனு. ஆதி எம்.எல்.ஏ. அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:—

"தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தீபாவளிப் பரிசாக அளிக்கப்பட்டுள்ள போனசு அறிவிப்பு, வாடிக்கிடந்த உள்ளங்களுக்கெல்லாம் உவகை தரத்தக்க செய்தியாகும்.

கடந்த 24 ஆண்டுகளாக 'மெரிட் போனசு' என்பதன் பெயரால் கண்டக்டர்களுக்கும்—டிரைவர்களுக்கும் மட்டுமே போனசு கிடைத்துவந்தது; இதனைப் போக்குவரத்துத் தொழிலாளர்களில் 100-க்கு 10 பேர் மட்டுமே பெற முடிந்தது.

பின்னர், பொறியியல் பிரிவினருக்கு 10 சதவிகித போனசும், போக்குவரத்தும் பிரிவினருக்கு நாள் ஒன்றுக்கு 25 காசும், இரு தரப்பினருக்கும் 'அட்டெண்டன்சு போனசு' ஆக ரூ 7 50-ம் வழங்கப்பட்டது; இதன்படி, பொறியியல் பிரிவினர் மட்டுமே போனசாகப் பெருந் தொகையைப் பெற்றுவந்தனர்; இந்த நிலையை எண்ணி இதர தொழிலாளர்கள் அடைந்துவந்த ஏக்கம் இப்போது நீங்கிவிட்டது.

அண்ணா வழியில் நடக்கும் தமிழக அரசு, என்றும், 'தொழிலா

(4-ம் பக்கம் பார்க்க)

ரூ. 6 இலட்சம் மதிப்புள்ள கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

பம்பாய், அக். 14—

வட பம்பாயில் ஓரிடத்தில் சுங்க அதிகாரிகள் சோதனை நடத்தி ரூ. 6 இலட்சம் பெறுமானமுள்ள கடத்தல் பொருள்களைக் கைப்பற்றினர்.

ஒரு லாரியில் சாமான்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்த அதிகாரிகள் அதன் அருகில் விரைந்து சென்றனர்; ஆனால் சாமான்களை ஏற்றியவர்கள் இருட்டில் தப்பியோடிவிட்டனர்.

ஜெர்மன் சூட் துணிகள்—ஜப்பானிய புடவைகள்—பிரெஞ்சு வாசனைப் பொருள்கள்—டிரான்சிஸ்டர்கள் ஆகியவை அந்த லாரியில் இருந்தன.

லாரியின் சொந்தக்காரரை அதிகாரிகள் தேடி வருகிறார்கள்.

மின்சாரத் திட்டப் பணி நின்றது

பாகிஸ்தான் உள்நாட்டுப் போரின் விளைவு

புதுடில்லி, அக். 14—

பாகிஸ்தானில் கர்ணபுரி மின்சாரத் திட்டக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த ஓர் அமெரிக்க நிறுவனம், வேலையை நிறுத்திவிட்டுச் சென்றுவிட்டதாக கராச்சி 'ஜங்' பத்திரிகை தெரிவிக்கிறது.

உள்நாட்டுக் கலவரங்களும், வேலைக்கு ஆள் கிடைக்காததுமே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

ரூ. 397.5 இலட்சம் காண்டிராக்ட் வேலை இது; 1964-ல் கையெழுத்தான இந்த காண்டிராக்டில் பாதி வேலையைத்தான் அமெரிக்க நிறுவனத்தால் செய்ய முடிந்திருக்கிறது.

அதிபர் யாகியாகானின் பூச்சாண்டிக்கு அஞ்சோம்

கொலைவெறிப்படையை முறியடிக்க கொரிலாக்கள் ஆயத்தம்

'ஆட்சி மாற்றம்' என்பதெல்லாம் வெளியுலகை ஏமாற்றும் தந்திரம்

'வங்கதேச உள்துறை அமைச்சர்' விளக்கம்

முஜிப் நகர், அக். 14—

"யாகியா கானின் புதிய அறை கூவலை விடுதலைப்படை ஏற்று, அவரது கொலை வெறிப்படையை வங்க தேசத்தின் புனித மண்ணிலிருந்து நிர்மூலமாக்கிவிடும்"

என்று வங்கதேச அரசின் உள்துறை அமைச்சர் காமருஸ்மான் அறிவித்தார்.

யாகியா கானின் வானொலி உரை பற்றிக் கருத்தறிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இந்தியாவை இதில் எப்படியாவது சம்பந்தப்படுத்திக் காட்டவேண்டுமென்ற பாகிஸ்தானின் துர்நோக்கத்தைக் கண்டு வங்க தேச மக்கள் ஏமாந்துவிடப் போவதில்லை; பாகிஸ்தானிகளின் அட்டூழியங்களுக்கும்—ஆக்கிரமிப்புக்கும் விடுதலை வீரர்கள், போர்க்களங்களில் தகுந்த பதிலடி கொடுத்து வந்துள்ளனர்—இனியும் கொடுத்துவருவர்' என்றார் அவர்.

வங்க தேசத்தில் இடைத் தேர்தலை நடத்தி, தேசிய சட்டமன்றத்தைக் கூட்டப்போவதாக யாகியா கான் கூறியிருப்பது பற்றி அவர் கூறியதாவது:—

"இடைத் தேர்தல் என்ற பெயரில் ஒரு கேலிக் கூத்தை நடத்த யாகியா கான் துணியமாட்டார் என்று நம்புகிறேன்; இருப்பினும், தமது திட்டத்தைத் துணிந்து செயல்படுத்த முயலுவாரானால், இந்தச் சதியை வங்க தேச கொரில்லாக்கள் முறியடிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

யாகியாகான், ஒரு வெளிநாட்டு ஆக்கிரமிப்பு இராணுவத்தின் தலைவர்; அவருக்கு எனது நாட்டைப் பற்றிப் பேச எவ்வித உரிமையும் கிடையாது. வங்கதேசம் இப்போது ஆதிபத்திய உரிமையுடன் கூடிய சுதந்திர நாடாகும்."

திசை திருப்பும் முயற்சி

"மனிதகுல நாகரிகத்தின் வரலாற்றிலேயே மிகவும் வெறுக்கத்தக்க குற்றத்தை இழைத்துவிட்டு—அதிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைத் திருப்புவதற்காகச் செய்யப்படும் வீண் முயற்சியே யாகியாவின் வானொலி உரையாகும்" என்று வங்க தேச அரசின் பேச்சாளர் ஒருவர் கூறினர்.

"இஸ்லாமின் பெயரால் பாகிஸ்தானின் ஒருமைப்பாட்டைக் காக்குமாறு யாகியாகான் வேண்டுகோள் விடுத்திருப்பது, அவரது நிலை வெகுவாக ஆட்டம் கண்டிருப்பதற்கு ஒரு திட்டவட்டமான எடுத்துக்காட்டாகும்; சிந்து, மஞ்சாப், பலுச்சிஸ்தான், எல்லைப்புற மாகாணம் ஆகியவற்றை சேர்ந்த மக்கள் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியை எதிர்த்து முழுமூச்சுடன் போராடி வருவது அனைவரும் அறிந்தது தான்; எனவே, இந்த வேண்டுகோளை எவரும் சீந்தப்போவதில்லை என்பது திண்ணமாகும்" என்றும் அந்தப் பேச்சாளர் கூறினர்.

வங்க தேசத் தூதரகக் கருத்து

"அதிகாரத்தை மாற்றிக் கொடுக்கும் எண்ணம் தமக்கு உண்மையாகவே இருப்பதாக உலகை நம்ப வைப்பதற்காக யாகியா கான் செய்யும் மற்றொரு விஷம முயற்சியாகும் இது" என்று டில்லியிலுள்ள வங்க தேசத் தூதரகம் கூறுகிறது.

'டான்' இதழும் குறைகூறுகிறது

"மாற்றியமைக்கப்படும் பாகிஸ்தான் தேசியச் சட்டமன்றத்திற்கு, சனநாயக அருகதை இராது" என்று கராச்சியிலிருந்து வெளியாகும் 'டான்' இதழ் கூறுகிறது.

இந்த அவை டிசம்பரில் கூடும்போது, மேற்குப் பாகிஸ்தானைவிட அதிக மக்கள் தொகை உள்ள கிழக்கு வங்கத்துக்கு இதில் குறைந்த இடங்களே இருக்கும் என்பதை இதற்குக் காரணம் காட்டுகிறது.

தேசியச் சட்டமன்றத்தைச் சேர்ந்த 88 கிழக்கு வங்க உறுப்பினர்கள் பதவியில் நீடிக்க யாகியா கான் அனுமதித்துள்ள போதிலும், 15 முதல் 20 பேர் வரைதான் அவையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளத் தயாராயிருப்பதாகத் தெரியப்படுத்தியுள்ளனர்; எனவே, தேசியச் சட்டமன்றம் கூடும்போது கிழக்கு வங்கத்துக்குரிய சுமார் 70 இடங்கள் காலியாக இருக்கும் என்பதை 'டான்' இதழ் சுட்டிக்காட்டுகிறது.

"இந்த 88 இடங்களில் மிகப் பெரும்பாலானவை காலியாக இருக்கும் நிலைமையில், தேசியச் சட்டமன்றம் கூடுவது அதன் மதிப்புக்கு உரியதாக இருக்காது" என்கிறது 'டான்'.

300 பேர் கொண்ட தேசியச் சட்டமன்றத்தில் கிழக்கு வங்கத்தின் இடங்கள் 162; இதில் 161 இடங்களை முஜிபுரின் அவாமி லீக் கைப்பற்றி இருந்தது நினைவிருக்கலாம்.

கங்கை நதி வெள்ளக் கட்டுப்பாடு

மத்திய அரசிடம் நான்கு மாநிலங்களின் கோரிக்கை

புதுடில்லி, அக். 14—

தங்கள் மாநிலங்களில் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசிடம் பீகார், ஒரிசா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் ரூ 80 கோடி உதவி கோரின.

வெள்ளப் பிரச்சினை பற்றி விவாதிக்க 3 மாநிலங்களின் முதலமைச்சர்கள்—மேற்கு வங்காள கவர்னர் ஆகியோர் கூட்டத்தை, அமைச்சர் கே. எல். ராவ் கூட்டினார்; அக்கூட்டத்தில் இக்கோரிக்கை எழுப்பப்பட்டது.

மத்திய உதவி பற்றித் தலைமையமைச்சருடனும்—நிதியமைச்சருடனும் விவாதிக்க உ.பி. முதலமைச்சர் கமலபதி திரிபாதிக்குக் கூட்டம் அதிகாரம் அளித்தது.

"மத்திய அரசு உருவாக்கியுள்ள முன்னுரிமைத் திட்டங்களை அடுத்த 3 ஆண்டுகளில் நிறைவேற்ற இந்த மாநில அரசுகள் வசதி திரட்டுவது இயலக்கூடியதல்ல" எனக் குறிப்பிடப்பட்டது.

அத்திட்டங்களை நிறைவேற்ற ரூ. 80 கோடி செலவிடப்பட்டால், மத்திய அரசுக்கு ரூ. 100 கோடி மிச்சமாகும் என முதலமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்; வெள்ளம் காரணமாக ஆண்டுதோறும் ஏற்படும் நட்டத்தையும் அவை குறைக்கும்.

கங்கை நதி வெள்ளக் கட்டுப்பாடு வாரியம் நிறுவும் யோசனையைக் கூட்டம் ஒருமனதாக அங்கீகரித்தது.

இந்த ஆண்டு வெள்ளத்தால் நாட்டில் ஏற்பட்ட ரூ. 556 கோடி நட்டத்தில் இந்த மாநிலங்களின் நட்டம் ரூ. 544 கோடி எனக் குறிப்பிடப்பட்டது.

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

செயற்குழு—பொதுக்குழுக் கூட்டங்கள்

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் செயற்குழு—பொதுக்குழுக் கூட்டங்கள் செப் 29, 30 ஆகிய நாட்களில் திருச்சி தில்லை நகரில் நடைபெற்றது; சங்கத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தா. கிருட்டினன் தலைமை தாங்கினர்.

எல்லாக் கிளைகளிலிருந்தும் வந்திருந்த நிர்வாகிகள், தங்கள் பகுதியிலுள்ள தொழிலாளர்களிடை மலிந்துகிடக்கும் குறைபாடுகளை விளக்கியும், நிர்வாகத்தின் அக்கறையற்ற போக்கைக் கண்டித்தும் பேசினர்.

30—9—71 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருட்டினமூர்த்தி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் துணைத் தலைவர் திரு. நல்லுசாமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைவழங்கினர்.

சங்கத் தலைவர் தா. கிருட்டினன், பொதுச்செயலாளர் செ. குப்புசாமி ஆகியோர் ஓராண்டுக் காலத்தில் சங்கம் ஆற்றிய ஏராளமான பணிகளை விளக்கியும், மேலும் நல்ல முறையில் பணியாற்றி எல்லாத் தொழிலாளர்களையும் இச்சங்கத்தின்பால் ஈர்க்கும் முறையில் ஒரு கட்டுப்பாடான அமைப்பாக வளர்க்க அனைவரும் பாடுபட வேண்டும் என்று விளக்கவுரை ஆற்றினர்.

கூட்டத்தில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர்., ஜி பி. சோமசுந்தரம், உடுமலை நாராயணன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 'டாக்டர்' பட்டம் அளித்தமைக்குப் பாராட்டுத் தெரிவித்தும், மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுவதைக் கண்டித்தும்—அதற்கான ஒரு போராட்டத்தை நடத்துவதென்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழு

கூட்டுறவு நாணயச் சங்கம்

திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழு, பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு—கடன் அளிப்பு நாணயச் சங்கக் கூட்டம், லப்பைக் குடிகாடு கிளை நூலகத்தின் நூலகர் டி ஜேம்ஸ் தங்கராஜ் தலைமையில் திருச்சியில் நடைபெற்றது.

சங்கத்திற்குத் துணைத் தலைவர்—பொருளாளராக சமயபுரம்—சண்ணனூர் கிளை நூலகத்தின் நூலகர் எம். சிங்கராயன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டத்தில் கடன் நிலுவைகளை வசூலிப்பதற்கும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திரு. ஜி. டி. இராசகோபால் நன்றி கூறினர்.

மேல்பாதி தி. மு. க.

விருத்தாசலம் வட்டம் மேல்பாதி தி. மு. க. கிளையின் நிர்வாகிகள் தேர்தலை, திரு ந. சந்திரசேகரன் ஆணையாளராக இருந்து நடத்தி வைத்தார்; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

அவைத் தலைவர்: கோ. பத்மநாபன்; செயலாளர்: நா. இராமர்; துணைச்செயலாளர்: அரசன்; பொருளாளர்: து. கேசவன்; மேல் அமைப்புப் பிரதிநிதி: இர. குப்புசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: கோ. ஆறுமுகம், கி சுப்புராயன், டி. கலியமூர்த்தி, பொ. நடராசன், அ. சண்முகம், கே. இராசாமணி, அ. சக்கரபாணி, ச. தங்கராசு.

திருச்செங்கோடு

அண்ணா பொதுப்பணி மன்றம்

15—9—71-ல், திருச்செங்கோடு சக்தி ஆயில் மில்லில் கழகக் கொடி ஏற்றி அண்ணா படத்திற்கு மலர் மாலை அணிவித்து இனிப்பு வழங்கியதுடன், அண்ணா பொதுப்பணி மன்ற அமைப்புக் கூட்டம் என். கே. பி. வேல் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: டி. ஒய். தனுசுகோடி; செயலாளர்: எம். சுந்தரம்; பொருளாளர்: டி. கே. தீனதயாளன்; செயற்குழு உறுப்பினர்கள்: டி கே. சிவலிங்கம், எஸ். ஆர். கே. சக்திவேல், பி. இராமன், எம். சண்முகம், டி. ஆர். நாராயணசாமி, டி. எம். அமீர், டி. கே. கோவிந்தன்.

கோலாலம்பூரில் ரூ. 25 இலட்சம் செலவில் காந்தி நினைவுக் கட்டடம்

கோலாலம்பூர், அக். 14—

"இங்கு ரூ 25 இலட்சம் செலவில் ஆறு அடுக்குக் கட்டடம் ஒன்றைக் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது" என்று, காந்தி நினைவுக் குழுத் தலைவர் பி. பி. நாராயணன் தெரிவித்தார்.

இதற்கான நிலத்தை செலாங்கூர் அரசு 60 ஆண்டுக் குத்தகைக்குக் கொடுத்துள்ளது.

அக்கட்டடத்தில், காந்திய இலட்சியங்களைப் பரப்ப ஒரு மண்டபம்—ஒரு நூலகம்—இதர வசதிகள் இருக்கும்.

தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கம்

சென்னை நகரில் ஒரு மாத நிகழ்ச்சிகள்

சென்னை, அக். 13—

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கம், தமிழகத்தின் தலைநகரான சென்னையிலும் நடைபெற்றது.

7—9—71 முதல் 30—9—71 வரையில் விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது.

சென்னை நகர் முழுமையும் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு—ஐந்து பகுதிகள் மாவட்ட குடும்ப நலத் திட்ட விளம்பர அதிகாரிகளின் கீழும், ஆறுவது பகுதி மாநில காசநோய் பிரிவு விளம்பர அதிகாரியின் கீழும் செயல்பட்டன.

மாநகராட்சி மன்றத்துடன் இணைந்த மாவட்ட குடும்ப நலத் திட்ட செயலகத்தைச் சார்ந்தோர் இப்பிரச்சார விழாவில் பங்கேற்றனர்.

தீவிர குடும்ப நலத் திட்டப் பிரச்சார விழாவின்போது சென்னை நகரில் நாள்தோறும் பல பகுதிகளில் குடும்ப நலப் பொதுக்கூட்டங்கள்—கலை நிகழ்ச்சிகள்—வில்லுப்பாட்டு—கதா காலட்சேபம்—இசை நிகழ்ச்சி—நாடகங்கள்—திரைப்படக் காட்சிகள் நடைபெற்றன; சென்னை நகர சீரணியினர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

ஆங்காங்கே நடைபெற்ற குடும்ப நலப் பொதுக்கூட்டங்களில், மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள்—சட்டமன்ற உறுப்பினர்கள்—பிற பொதுநலப் பெரியவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

'சிறு குடும்ப நெறி'யை வலியுறுத்திக் குடும்ப நலப் பொதுக் கூட்டங்களில் உரையாற்றியவர்களில்—தமிழக மேலவைத் தலைவர் திரு. சி. பி. சிற்றரசு, அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, கவிஞர் கருணானந்தம், திரு. ம. பொ. சிவஞானம், ஔவை டி. கே. சண்முகம், திரைப்பட நடிகர் எஸ். ஏ. அசோகன், திரைப்பட நடிகை சந்திரகாந்தா, தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

செப்டம்பர் இறுதி வாரத்தில் வானொலி மூலம் குடும்ப நலத் திட்டத்தை விளக்கியும்—தீவிர குடும்ப நலப் பிரச்சாரம் பற்றியும் மக்கள் நல்வாழ்வுத்துறை இயக்குநர் டாக்டர் கே. பி. சாரதி உரையாற்றினர்.

தி.மு.க. தொழிற்சங்க சாதனை

இராசபாளையம்—பவர்லூம் தொழிலாளர்கட்கு 8.33 சதவிகித போனசு

இராசபாளையம், அக். 11—

இராசபாளையம்—கோமதிசங்கர்—சானகிராம்—இராமசாமி அண்டு கம்பெனி ஆகிய பவர்லூம் பாக்டரிகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 1970—71-ம் ஆண்டுக்குரிய போனசுத் தொடர்பாக மேற்கண்ட பாக்டரிகளின் நிர்வாகிகளுடன் இராசபாளையம் தொகுதி திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் செயலாளரும்—தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைச் செயற்குழு உறுப்பினருமான இரா. மா. பொன்னுச்சாமி பேச்சு நடத்தினர்; இதன் பயனாக, 8 33 சதவிகிதம் போனசு பெற்றிட உடன்பாடு காணப்பட்டது.

இராசபாளையம் வட்டாரத்தில் 8.33 சதவிகித போனசாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்ட முதல் ஒப்பந்தம் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினால்தான் செய்யப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தையில் நிர்வாகத்தின் தரப்பில் திரு ஏ. வி. ஆர். சங்கரசுப்பு, கே ஏ. நாராயணன், என். வேலப்பன் ஆகியோரும் தொழிலாளர்கள் தரப்பில் திரு. இரா. மா. பொன்னுச்சாமி, டி. பன்னீர்செல்வம், எஸ். பாலகிருட்டினன், எம். சஞ்சீவி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போனசுக்குப் போனசு வழங்கும் விதத்தில் அரசு டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளர்களின் பழைய ஒப்பந்தத்தின்படி பெறும் போனசுக்கு மேலும் 1 சதவிகிதம் கூடுதல் போனசு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி சுமார் 210 தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ ரூ 20,000 வழங்கப்படும்.

குடும்ப நலத் திட்டச் செயலாக்கம்

கழகச் சட்டமன்ற உறுப்பினர் முன்னுதாரணம்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியப் பகுதியில், குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் புதுமை நிகழ்ந்திருக்கிறது.

26—9—71 அன்று தண்டராம்பட்டுத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் எம்.எஸ். இராதாகிருட்டினனும்—மற்றும் எட்டுப் பேரும குடும்ப நலத் திட்ட விளம்பர ஊர்தியில் அமர்ந்து—தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து புறப்பட்டு வேலூர்வரை 60 மைலுக்கு இடைப்பட்ட எல்லாச் சிற்றூர்களிலும், குடும்ப நலத் திட்டப் பிரசாரம் செய்து—இறுதியில் வேலூர் வந்தடைந்து—அரசினர் மருத்துமனையில், குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்துகொண்டனர்; இவ்விதம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோர் விவரம்:—

திரு. எம். எ. இராதாகிருட்டினன எம்.எல்.ஏ; திரு. கே. குலசேகரன், தலைவர், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம்; திரு. ஜி. முத்தியாலு, தலைவர், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய குடும்ப நலத திட்டம்; திரு. கே. முத்துக்கிருஷ்ணன், தி.மு.க. செயலாளர், தென்கரிம்பலூர்; திரு. கே. சீனுவாசன், ஒன்றிய ஒப்பந்தக்காரா, தென்முடியனூர்; திரு. பி. பச்சியப்பன், தி.மு.க. வட்டப் பிரதிநிதி, காம்பட்டு; திரு. ஜி. சண்முகம், தி.மு.க. செயலாளா, காம்பட்டு; திரு. ஜி. கிருஷ்ணன், ஒன்றிய ஒப்பந்தக்காரர், தண்டராமபட்டு; திரு. கே. வெங்கடராயன், ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, தண்டராம்பட்டு

இந்த எழுச்சி மிகுந்த புதுமை நிகழ்ச்சிக்குத் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. ஆர். பத்மநாபன் முன்னின்று ஏற்பாடு செய்தார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சி நிலை இல்லை

பருவ மழையால் உரிய பயன் கிட்டும் என நம்பிக்கை

நிருபர்களிடம் மாவட்டக் கலெக்டர் விளக்கம்

காஞ்சிபுரம், அக். 15—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் 'வறட்சிப் பகுதி' என்று பிரகடனம் செய்யும் அளவுக்குச் சில பகுதிகளின் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை"

என்று கலெக்டர் ஆர்.ஏ. சீதாராமதாஸ் நிருபர்களிடம் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

'கோட்ட அலுவலர்கள் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து நேர்பட மண் ராசி—பயிர் ராசி போன்றவற்றைத் தணிக்கை செய்கின்றனர்.

பயிர்கள், சென்ற ஆண்டுபோல் அவ்வளவு நல்லநிலையில் இருக்கவில்லை யென்றாலும், பருவ மழை தவறியதால், 'பஞ்சப் பகுதி' என்று பிரகடனம் செய்யும்படி நிலைமை மோசமாக இருக்கவில்லை.

சில பகுதிகளில் வேர்க் கடலை பயிர் நிலவரம் நன்றாக இல்லை; பருவ மழை மட்டும் தவறவில்லை என்றால், நல்ல விளைச்சலுக்கான வாய்ப்பு உள்ளது."

ஆகஸ்டு—செப்டம்பரில் வறட்சி நிலை நீடிக்குமோ என்று அச்சமிருந்தது; பின்னர் மழை பெய்தது; இதனால் நிலைமை சற்றுத் திருந்தியது; பருவ மழை இன்னும் வரவில்லை; பருவ மழை திரும்பியதும் வருகிற மாதங்களில் போதிய மழை பெய்யுமென்றும் அப்போது நெருக்கடி தீர்ந்துவிடுமென நம்புகிறேன்.

சூலை—செப்டம்பர் மாதங்களில் சராசரியில் 360மி.மீ. மழை பெய்ய வேண்டும்; இவ்விரண்டில் 280 மி.மீ. மழைதான் பெய்தது; நல்ல பருவ மழை பெய்யும்; இது பயிருக்கு நன்மை செய்யுமென்று நம்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் விளைவு நிலை திருப்திகரமாகவே உள்ளது; 1971 அக் 4 வரை லெவி மூலம் 7161 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

சென்னை நகரத்தைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகளில் குடும்பக் கார்டுகள் மூலம் முதல் தர அரிசி வழங்கப்படுகிறது; ஒரு கிலோ புழுங்கல் அரிசி விலை ரூ. 1 06 (பச்சரிசி கிலோ ரூ. 1.12); மொத்தம் 22 கடைகள் மூலம் அரிசி வழங்கப்படுகிறது.

மதுராந்தகம், செங்கை வட்டங்களில் ரூ. 110 இலட்சம் செலவில் 1,000 கிணறுகள் வெட்டவும், 1,000 பம்பு செட்டுகள் வைக்கவும் அரசு அனுமதித்துள்ளது.

451 புதுக் கிணறுகள் தோண்டவும் செப்டம்பர் 30 வரை ரூ. 24.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்தக் கட்டத்தில், காஞ்சி வட்டத்தில் 30 மாதங்களில் 900 கிணறுகள் தோண்டப்படும்.

மதுவிலக்கு ரத்து, சிறு சேமிப்புகள், சினிமா, ஓட்டல்கள் முதலியவற்றைப் பாதிக்கவில்லை.

சிறு சேமிப்பில் ரூ. 22 58 இலட்சம் சேர்ந்துள்ளது; இலக்கு ரூ. 60 இலட்சம் எட்டப்படும் என்று நம்புகிறேன்.

சாராய—கள்ளுக் கடைகள் மூலம் மொத்த வருவாய் ரூ. 1.3 கோடியாகும்."

தெ. ஆ. மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டம்

நவம்பர்—டிசம்பர் திங்களில் தீவிர இயக்கம்

தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கம், தென்னாற்காடு மாவட்டத்தில், 15—11—71 முதல் 15—12—71 வரை நடைபெறும்.

மாவட்டத்தின் 8 தாலுகாக்களும் 8 பகுதிகளாக எடுத்துக் கொள்ளப்படும்; ஐந்து தாலுகாக்கள் ஐந்து மாவட்ட குடும்ப நலத் திட்ட விளம்பர அதிகாரிகளின் கீழும், ஒரு தாலுகா மண்டல மக்கள் தொடர்பு அதிகாரியின் கீழும், மற்றொன்று பாண்டிச்சேரியில் உள்ள இந்திய மக்கள் விளம்பர அதிகாரியின் கீழும், எட்டாவதான திண்டிவனம் பகுதி சிறு சேமிப்பு அதிகாரியின் கீழும் இயங்கும்.

ஒவ்வொரு தாலுகாவிலும் 6 முதல் 10 நாட்கள் வரையில் குடும்ப நலக் கருத்துக் காட்சிகள் நடைபெறும்.

மாவட்டம் முழுவதும் குடும்ப நலக் கலை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, கதா காலட்சேபம், இசை நிகழ்ச்சி, நாடகங்கள், திரைப்படக் காட்சிகள், பொதுக்கூட்டங்கள் ஆகியவை நடத்தப்படும்; குடும்ப நல ஊழியர்கள் வீடு வீடாகச் சென்று, சிறு குடும்ப நெறியினை வலியுறுத்துவர்.

1—12—71 முதல் 31—12—71 வரை 'சேவை இயக்கம்' நடைபெறும்; இக்காலக் கட்டத்தில் தென்னாற்காடு மாவட்டம் முழுவதுமாகச் சேர்த்து தகுதி வாய்ந்த 25,000 பேருக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்துகொள்வோருக்கு கிடைக்கவிருக்கும் பல்வேறு வசதிகள் வருமாறு:—

அறுவைச் சிகிச்சைக்குப் பின் 7 நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வசதியளிக்கப்படும்; இலவச மருத்துவ வசதி; இலவசமாக உணவு; அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தந்தைக்கு ஒரு வேட்டியும், ஒரு துண்டும்—தாய்மார்களுக்கு ஒருபுடவையும் இலவசமாக வழங்கப்படும்; அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோரின் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிக் 'கார்டு' கொடுக்கப்படும்; தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்று இலவசமாக வழங்கப்படும்; இலவசப் போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படும்; அனைத்திற்கும் மேலாக, அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு ஒவ்வொருவருக்கும் ரூ. 75 அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலும், குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோருக்கு வழக்கமாக அளிக்கப்படும் வேறு பல மருத்துவச் சலுகைகளும் அளிக்கப்படும்.

சென்னை 78-வது வட்ட அண்ணா பகுத்தறிவு மன்றம்

சென்னை—இராயப்பேட்டை அம்மையப்பமுதலி வீதியில் பேரறிஞர் அண்ணா பகுத்தறிவு மன்றம் துவங்கப்பட்டு, 5—10—71-ல் வட்டச் செயலாளர் த. சதானந்தம் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: அ. பெருமாள்; செயலாளர்: க. கிருட்டினமூர்த்தி; துணைச்செயலாளர்: மு. இளவழகன்; பொருளாளர்: பொ. நா. சண்முகம்; மற்றும் 13-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கிளை நூலகத்தில் அண்ணா படத் திறப்பு

நாம்பக்கோவில் சந்தை கிளை நூலகத்தில் வ. அ செய்யதுபட்டானி தலைமையில், வீ. சுப்பையா அவர்கள் அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்.

அண்ணாவின் சிறப்பியல்புகளை விளக்கி, வ. பிச்சை முகைதீன், வெ. தனுஷ்கோடி, ந. சாகுல் அமீது, தங்கம், மற்றும் பலர் பேசினர்; நூலகர் ஞான நடராசன் நன்றி கூறினர்; இனிப்பு வழங்கப்பட்டது.

நீத்தார் நினைவு

சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார்கோயில் முன்னாள் பேரூராட்சி உறுப்பினரும், முன்னாள் தி. மு. க. செயலாளருமான கோ. துரைராசன், 24—9—71-ல் இயற்கையெய்தினார்; அன்னாரின் நினைவு நாள், 4—10—71 அன்று திரு. எம். ஆர் இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. துரைராசன் அவர்களின் உருவம் படத்தை திரு. கே. என். இராமச்சந்திரன் திறந்துவைத்துப் பேசினார்.

மற்றும், வழக்கறிஞர் வி. வி. சுவாமிநாதன், மாவட்ட முஸ்லிம் லீக் செயலாளர் எச். முகம்மது, காட்டுமன்னார்கோயில் பேரூராட்சித் தலைவர் எல். என். இராமலிங்கம், லால்பேட்டை எஸ். எஸ். மணி, பூவிழுந்தாநல்லூர் ஊராட்சி உறுப்பினர் சிவ சொக்கலிங்கம், காட்டுமன்னார்கோயில் நகர தி மு. கழகச் செயலாளர் ந. பன்னீர் செல்வம் ஆகியோர் மறைந்த தோழரின் அருங்குணங்களைப் பற்றிப் பேசினர்.

கொள்முதல் விலை உயர்த்தப்படுகிறது

விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கை

சென்னை, அக். 15—

விவசாய விலைக் கமிஷன் சிபாரிசு செய்துள்ளபடி, ஸ்டாண்டர்டு நெல் ரகத்தின் விலையை குவிண்டாலுக்கு ஒரு ரூபாய் அதிகரிக்க வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் தனிக் கோரிக்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் தெரிவித்திருக்கிறது.

ஸ்டாண்டர்டு ரகம், தமிழ்நாட்டில், நடுத்தர ரகமாகக் குறிப்பிடப்படுகிறது; எனவே, 'நைஸ் ரகம்' என்ற குறிப்பிடப்படும் உயர்ந்த ரகத்துக்கும் விலை உயர்வு பொருந்தும்" என்று அதிகாரி ஒருவர் கூறினார்.

புதிய விலைகள் வருமாறு:—
மோட்டா ரகம் குவிண்டாலுக்கு ரூ. 46; நடுத்தர ரகம் குவிண்டாலுக்கு ரூ. 49; நைஸ் ரகம் குவிண்டாலுக்கு ரூ. 52.

கூடுதல் விளைச்சல் தரும் ஐ. ஆர். 8, ஐ. ஆர்.-5 ரகங்களுக்கு குவிண்டாலுக்கு ஒரு ரூபாய் என்ற ஊக்குவிப்பு சலுகையும் நீடிக்கும்.

புதிய விலைகள் இன்று முதல் நடைமுறைக்கு வரும்.

குறுவை அறுவடையிலிருந்து இந்திய உணவுக் கார்ப்பரேஷனுக்கு நெல் விற்கும் விவசாயிகளுக்கு கூடுதல் விலைகள் பயனளிக்கும்.

"தஞ்சை விவசாயிகள் இந்த சமிக்ஞையைப் புரிந்துகொண்டு நல்ல ரக நெல்லை ஒப்படைப்பர் என்று அரசு நம்புகிறது" என்று அதிகாரி அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டார்.

ஆஸ்பெட் உருக்காலைத் திட்டம்

தலைமையமைச்சர் இந்திரா துவக்கி வைத்தார்

பெல்லாரி, அக். 15—

பெல்லாரிக்கும் — ஆஸ்பெட்டுக்கும் இடையே விஜயநகர் உருக்கு ஆலை அமைக்கப்படும் திட்டத்தை தலைமையமச்சர் இந்திரா காந்தி தொடங்கி வைத்தார்.

இந்த உருக்கு ஆலையில், 20 இலட்சம் டன் உருக்கு உற்பத்தியாகுமென மதிப்பிடப்படுகிறது.

இந்த உருக்கு ஆலையால் பொதுவாக மைசூருக்கும் குறிப்பாக பெல்லாரி மாவட்டத்திற்கும் வளம் ஏற்படும்" என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நான்காவது திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மூன்று அரசாங்கத் துறை உருக்கு ஆலைகளில் இது கடைசியானதாகும்; இந்தியாவின் ஏழாவது உருக்கு ஆலையாகும் இது.

"இந்த உருக்கு ஆலையில் 1978-ல் உருக்கு உற்பத்தி தொடங்கும்; இந்த ஆலைக்கு மொத்தம் ரூ. 600 கோடி செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

இது தவிர, உருக்கு ஆலையைச் சுற்றிலும், நகர அமைப்புக்கு ரூ. 100 கோடி செலவாகும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

இந்த உருக்கு ஆலையில், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களுக்கும் — தெரியாதவர்களுக்குமாக 25,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

சென்னை நகரில் தடையுத்தரவு

சென்னை, அக். 15—

சென்னை நகரில் கூட்டங்கள் — ஆர்ப்பாட்டங்கள் — ஊர்வலங்கள் ஆகியவற்றைத் தடை செய்து போலீசுக் கமிஷனர் ஷெனாய், உத்தரவு ஒன்றைத் பிறப்பித்திருக்கிறார்.

இந்த உத்தரவு 15 நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, ஆயோதாராமண செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தின் கனிவளம்

தனி ஆய்வு நடத்த ஆளுநர் காட்டும் ஆர்வம்

தர்மபுரி, அக். 14—

"தர்மபுரி மாவட்டத்திலுள்ள அபூர்வமான கனி வளங்கள் பற்றி ஒரு விரிவான ஆய்வு நடத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப் போகிறேன்"

என்று தமிழக ஆளுநர் கே. கே. ஷா, ஒகனேக்கல்லில் ஓர் ஓய்வு விடுதிக்கான அடிக்கல்லை நாட்டிப் பேசுகையில் கூறினார்.

காவிரி நீர்த் தகராறு

"காவிரி நீர்த் தகராறு பற்றி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மனநிறைவு தரக்கூடிய ஒரு தீர்வு விரைவில் காணப்படும் என்று நம்புகிறேன்" என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் க. இராசாராம்

"ஒகனேக்கல் ஓய்வு விடுதி ரூ. 2.50 இலட்சம் செலவில் கட்டப்படும்" என்று சுற்றுலாத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் கூறினார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

"தமிழ்நாட்டில் சுற்றுலா அபிவிருத்திக்காக இரண்டு மாடிகளும் அதற்கு மேற்பட்ட மாடிகளும் கொண்ட ஓட்டல்களைக் கட்ட முன்வருபவர்களுக்குத் தமிழ்நாட்டுச் சுற்றுலாக் கார்ப்பரேஷன் உதவி தரும்" என்று கார்ப்பரேஷனின் தலைவர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கூறினார்.

ரிசர்வ் பாங்கியில் அதிகப் பற்று பெறும் மாநிலங்கள்

கட்டுப்படுத்துவது குறித்து சவாண் ஆலோசனை

புதுடில்லி, அக். 14—

ஏற்கனவே ரிசர்வ் பாங்கியிலிருந்து அதிகப் பற்று வாங்கியிருந்தது, கடந்த ஜுன் இறுதியில் சரிக்கட்டப்பட்ட பிறகு இப்போது மீண்டும் எட்டு மாநிலங்கள் ரூ. 168 கோடி அளவுக்கு அதிகப் பற்று வாங்கியிருக்கின்றனவாம்.

இவைகளில், அசாம் — பீகார் — இராஜஸ்தான் — மாராட்டிரம் ஆகிய 4 மாநிலங்களுடன் நிதியமைச்சர் விவாதம் நடத்தினார்.

அதிகப் பற்று பெறப்படுவதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்தும், பொருளாதாரக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் குறித்தும் சவாண் அவர்களிடம் எடுத்துக் கூறியதாகத் தெரியவருகிறது.

ரூ. 130 கோடி செலவில் அலுமினிய ஆலை

குசராத் மாநிலத்தில் அமையுமாம்

அகமதாபாத், அக். 15—

குசராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் ரூ. 130 கோடி செலவில் அலுமினியப் பொருட்கள் உற்பத்திச்சாலையை அமைக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

ஏற்கனவே இங்கு ரூ 30 கோடி செலவில் ஓர் அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாநில ஆளுநர் மத்திய உருக்குத் துறை அமைச்சர் குமாரமங்கலத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு புதிய முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

கழிவு நீரால் ஏற்படும் துர்நாற்றம்

தவிர்க்க மாநகராட்சி நடவடிக்கை

சென்னை, அக். 15—

"சென்னை நகரில் சாந்தோம், பட்டினப்பாக்கம் பகுதிகளில் கடற்கழியில் சாக்கடை நீர் விடப்பட்டு வருகிறது.

"துர்நாற்றத்தையும், கழிவுப் பொருட்களையும் அகற்றுவதற்காக அந்தச் சாக்கடை நீரில், 'சோடியம் நைட்ரேட்' தெளிக்க சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்திருக்கிறது"

என்று மேயர் சா. கணேசன், செய்தியாளரிடம் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"துர்நாற்றம், கழிவுப் பொருள் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்குச் சாக்கடை நீர் சிறிது தொலைவில் கடலில் விழ நடவடிக்கைகள் எடுக்குமாறு மாநில வீட்டு வசதி வாரியத்துக்குக் கூறப்பட்டிருக்கிறது."

'நிதி வாய்ப்புக்களைப் பெருக்கியுள்ளோம்'

'தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் ஏராளம்'

'அந்த அளவுக்குத் திட்டத்தை விரிவாக்குக'

மத்திய நிதியமைச்சரிடம் தமிழக முதல்வர் வலியுறுத்தல்

புதுடில்லி, அக். 15—

"தமிழகத்தின் வரவு — செலவுத் திட்டத்தில் ஏற்படும் பற்றுக்குறை, மற்றும் ரிசர்வ் பாங்கியிடம் உள்ள அதிகப் பற்று ஆகிய பிரச்சினைகளைப் பற்றி மத்திய நிதியமைச்சர் சவானுடன் தமிழக முதலமைச்சர் விவாதம் நடத்தினார்; அதுபோது, சவானிடம் முதல்வர் வலியுறுத்திக் கூறியதாவது:—

"தமிழ்நாடு, வரி வாய்ப்புகளை மிக நல்ல முறையில் பயன்படுத்தி இருக்கிறது.

நான்காவது திட்ட காலத்தில், தமிழ்நாடு ரூ. 75 கோடி அளவுக்கு நிதி வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

ஆனால், தமிழ்நாடு அரசு எடுத்துவரும் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக நான்காவது திட்டகாலத்தில் ரூ. 150 கோடி அளவுக்கு வருவாய்களைப் பெருக்குவதற்கு வழிவகைகள் காணப்பட்டுள்ளன.

உணவுத் துறையில் செழிப்பு இருப்பதால் அரசுக்குச் செலவு மிச்சமாகியுள்ளது.

மதுவிலக்கை ஒத்திவைத்ததால் அரசின் வருவாய் பெருகியுள்ளது.

எனவே, திட்டத்தின் அளவைப் பெரிதாக்க வேண்டுமென்று கூறிவிடுத் தமிழ்நாட்டுக்கு எல்லாத் தகுதிகளும் உள்ளன.

தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் ஏராளமானவை; பலதரப்பட்ட அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் தமிழகத்துக்கான திட்டத்தை மேலும் விரிவானதாக ஆக்க வேண்டும்."

ஒரே ராக்கெட்டில் 8 செயற்கைக் கிரகங்கள்!

இரஷ்யா ஏவியது

மாஸ்கோ, அக். 15—

ஆள் இல்லாத 8 செயற்கைக் கிரகங்களை ஒரே ராக்கெட்டில் வைத்து விண்வெளியில் சோவியத் இரஷ்யா ஏவியிருக்கிறது.

சிக்கல்கள் ஏதுமின்றி இந்தச் செயற்கைக் கிரகங்கள் பூமியைச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன.

விண்வெளியில் சோதனை நடத்துவதற்கான விஞ்ஞானக் கருவிகள் இந்தச் செயற்கைக் கிரகங்களில் பொருத்தப்பட்டிருக்கின்றன.

இந்தச் செயற்கைக் கிரகங்கள் பூமியைச் சுற்றிவர 115 நிமிடங்களாகின்றன.

ஒரே ராக்கெட்டில் 8 செயற்கைக் கிரகங்களை வைத்து இரஷ்யா அனுப்புவது, இது மூன்றாவது முறையாகும்.

கேரள முதலமைச்சர் வலியுறுத்தல்

இதேபோல் கேரள முதலமைச்சரும் சவானுடன் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"தனி நபரின் சராசரி வரி செலுத்தும் அளவு கேரளத்தில் மிக உயர்ந்தபட்சமாக இருக்கிறது; ஆகவே, கேரளத்தில் புதிய வரிகள் போடுவதற்கான வாய்ப்பு எதுவும் கிடையாது.

கேரளத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெரிய அளவில் உள்ளது; இந்நிலையில், முதலீடுகளைக் குறைப்பதற்கில்லை.

ஆகவே, கேரளத்தின் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பெரிய அளவுத் திட்டம் தேவையாகும்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

16—10—71

சென்னை 7-வது வட்டம்

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழாவும் — அண்ணா பிறந்த நாள் விழாவும்; மாலை 6-மணிக்கு எம். சி. ரோடில்; தலைவர்: டி. எஸ். வேலன்; பேசுவோர்; இளம்பரிதி, பி. ஆர். இலட்சுமிகாந்தன், மு. வேதாசலம் எம். எல். ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், வெங்கடேசன் எம். சி., மு. பாண்டியன், வி. ஆறுமுகம், தமிழன்பன், அரங்கநாதன், வி. எம். கருப்பையா.

சிறுவர் கலைக் களஞ்சியம் வெளியீடு

தமிழ் வளர்ச்சிக் கழகச் சார்பில் உருவாக்கப்பட்டிருக்கும் 'சிறுவர் கலைக் களஞ்சிய'த்தின் மூன்றாவது தொகுதியை முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வெளியிடுவார்; இந்த விழா 17—10—71 மாலை 5-30 மணிக்கு இராஜாஜி மண்டபத்தில் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஆசிரியர் நாள் விழா

சென்னை கே. சி. சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளி சார்பில் ஆசிரியர் நாள் விழா, 16—10—71 மாலை 3-30 மணிக்கு நடைபெறும்; திரு. வி. பி. எம். அமிர்தலிங்கம் தலைமையில் திரு. எஸ். வி. சிட்டிபாபு சொற்பொழிவாற்றுவார்; திரு. ஏ. சங்கரலிங்கம், அண்ணா படத்தைத் திறந்து வைப்பார்.

ஏங்கிய உள்ளங்களின்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் நல அரசுதான்' என்பது, இந்த அறிவிப்பு மூலம் தெளிவாகி விட்டது.

போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் கண்டக்டர்கள் — டிரைவர்கள் — செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் (பரிசோதகர்), டைம்-கீப்பர்கள் (நேரம் காப்பாளர்கள்), ஆய்வாளர்கள் — மேலாளர்கள் ஆகியோர் கடந்த ஆண்டில் ரூ. 162, ரூ. 240, ரூ. 328 என்ற அளவில் போனசாகப் பெற்று வந்தனர்.

புதிய அறிவிப்பின்படி, இந்த ஆண்டில், ரூ. 240, ரூ. 315, ரூ 450, ரூ. 600 என்ற அளவில் கிடைக்கும்.

8 1/3 சதவிகிதம் என்ற கணக்கில் ஒருமாதச் சம்பளத்தைப் போனசாக — தீபாவளிப் பரிசாக வழங்கிய தமிழக அரசை மனமுவந்து பாராட்டுவதுடன், உளம்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்."

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

நிகழ்ச்சிகள்

அக். 19 முற்பகல் 11-மணி: நவலாக் (வ. ஆ. மாவட்டம்)— விதைப் பண்ணை பார்வையிடல்; 11-30 மணி: நவலாக் ஊராட்சி வரவேற்பு; மதியம் 12-மணி: காரை 10-வது வட்டம் பொதுமக்கள் வரவேற்பு; மாலை 3-30 மணி: இராணிப்பேட்டை நகராட்சி வரவேற்பு; 4-15 மணி: நகர தி. மு. கழகக் கட்டடத்திலிருந்து ஊர்வலம்; 6-மணி: பொதுக்கூட்டம் — ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்.

அக். 20 மாலை 4-30 மணி: வந்தவாசி—பேரூராட்சி மன்ற வரவேற்பு; 5-மணி: வந்தவாசி—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5-30 மணி: வந்தவாசி ஊராட்சி விவசாயக் கிடங்கு திறப்பு; 6-30 மணி: மருதநாடு—ஊராட்சி வரவேற்பு; இரவு 7-மணி: கீழ்க் கொடுங்காலூர்—ஊராட்சி வரவேற்பு; 7-30 மணி: கீழ்க் கொடுங்காலூர்—கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத் திறப்பு.